# மனிதன் இங்கே! மனுசி எங்கே?

சி.ஜெயசங்கர்.
2006

**(பறையடிக்கும் ஒலி கேட்கின்றது, 'தாகிணங்கிட ததிங் தத்துமி' தாளக்கட்டுக்கு ஆடி வருகிறது 'ஸ்பிங்ஸ்'. மன்னன் இடிபஸுக்கு உரிய முகமூடியைக் கையில் பிடித்தபடியும் தேவையான பொழுதுகளில் முகத்தை மறைத்துப் பிடித்தபடியும் இடிபஸுக்கு ஆடும் அளிக்கையாளர் மத்தள அடிக்கு ஏற்ப இன்னொரு திசையிலிருந்து ஆடி வருகிறார். இருவரும் ஒருவரையொருவர் எதிர்பாராதவிதமாக எதிர்கொள்கின்றனர்)**

**ஸ்பிங்ஸ்:** *ஏய்! மனிதப்பதரே! உன்னைத் தின்றுவிடப் போகிறேன்.*

**இடிபஸ்:** *ஏய்! மிருகமே! என்னை யாரென்று நினைத்தாய்? நான் கிரேக்க மன்னன் இடிபஸ்.*

**ஸ்பிங்ஸ்:** *ஏய்! நீ மன்னனோ! மடையனோ! பொதுசனமோ, பொதி சுமக்கும் கழுதையோ, எனக்கு அது தேவையில்லை.*

**இடிபஸ்:** *அப்போது உனக்கு என்னதான் தேவை?*

**ஸ்பிங்ஸ்:** *நான் போடும் புதிருக்கு விடையளிப்பாயானால் உன்னை விட்டு விடுவேன். இல்லையேல் உன்னை உயிருடன் விழுங்கி ஏப்பம் விட்டு விடுவேன்.*

**இடிபஸ்:** *எங்கே போடு உன் புதிரை! நான் விடுவித்துக் காட்டுகின்றேன்.*

**ஸ்பிங்ஸ்:** *காலையில் நாலு கால்களிலும், மதியத்தில் இரு கால்களிலும், மாலையில் மூன்று கால்களிலும் நடக்கும் விலங்கு எது?*

**இடிபஸ்:** *ஹ! மனிதன்!*

**ஸ்பிங்ஸ்:** *ங்! மனிதன் மட்டும் இல்லை, நீ மனுசியை மறந்து விட்டாய்!*

**இடிபஸ்:** *மனிதன் என்னும் போது, மனுசியும் அதற்குள் அடங்குகிறாள் தானே.*

**ஸ்பிங்ஸ்:** *நீ நினைக்கிறாய் அப்படி.*



**குரல் 1:** *மனிதன் நெருப்பைக் கண்டு பிடித்தான்.*

**குரல் 2:** *அப்ப மனுசி?*

**குரல் 1:** *மனிதன் சக்கரத்தைக் கண்டு பிடித்தான்.*

**குரல் 2:** *அப்ப மனுசி?*

**குரல் 1:** *மனிதன் நீராவிக் கப்பலைக் கண்டு பிடித்தான்.*

**குரல் 2:** *அப்ப மனுசி?*

**குரல் 1:** மனிதன் சந்திர மண்டலத்துக்குப் போனான்.

**குரல் 2:** அப்ப மனுசி?

**ஸ்பிங்ஸ்:** இப்பொழுது புரிகிறதா!
நீ மனுசியை மறந்து விட்டாய் என்பதை.
மனிதன் என்னும்போது மனுசி அதற்குள் அடங்கவில்லை என்பதை.



நெடு நாட்களின் பின்பு,
முதியோனும் பார்வையிழந்தவனுமான இடிபஸ்
தெருக்களில் அலைந்தான்.
பரிச்சயமானதொரு வாசனையை அவன் நுகர்ந்தான்.
அது ஸ்பிங்ஸ்.

“நானொரு கேள்வி கேட்கவேண்டும்” என்றான் இடிபஸ்.

“என் தாயை என்னால் ஏன் இனங்கண்டுகொள்ள முடியவில்லை?
நீ தவறான விடையைத் தந்தாய்” என்றான் ஸ்பிங்ஸ்.

“ஆனால், அதுதான் எல்லாவற்றையும் சாத்தியமாக்கியது”
என்றான் இடிபஸ்

“இல்லை” என்றான் ஸ்பிங்ஸ்.

“காலையில் நாலு கால்களிலும்
மதியத்தில் இரண்டு கால்களிலும்
மாலையில் மூன்று கால்களிலும் நடப்பது எது?
என்று கேட்டபோது
நீ, மனிதன் என்று விடையளித்தாய்.
மனுசி பற்றி எதுவும் நீ சொல்லவில்லை.”

“மனிதன் என்று சொல்லும் பொழுது
அதனுள் மனுசியும் அடங்கிவிடுகின்றது.
அது எல்லோரும் அறிந்தது” என்றான் இடிபஸ்.

“நீ நினைக்கின்றாய் அப்படி” என்றான் ஸ்பிங்ஸ்

**குரல்1:** ஒவ்வொரு ஆணினதும் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் நிற்கின்றாள்.

**குரல் 2:** இல்லை ஒவ்வொரு பெண்ணினதும் முன்னேற்றத்திற்கும் முன்னால் தடையாக ஆண் நிற்கின்றான்.

**இடிபஸ்:** இப்பொழுது புரிகிறது! மனுசி மனிதனுக்குள் அடங்கவில்லை என்பதை!
இப்பொழுது புரிகிறது! மனுசி மனிதனால் அடக்கப்பட்டிருக்கிறாள் என்பதை!

**ஸ்பிங்ஸ்:** சரி, காலையில் நாலு கால்களிலும், மதியத்தில் இரு கால்களிலும், மாலையில் மூன்று கால்களிலும் நடக்கும் விலங்கு எது?

**இடிபஸ்:** மனிதர்! மனிதர்!! மனிதர்!!!

**ஸ்பிங்ஸ்:** சரி, நீ போகலாம்.
போய் எல்லோருக்கும் இதைச் சொல்லு.
ஹ் ஹா!
(கொட்டாவி விட்டவாறு)
எனக்குச் சரியாகப் பசிக்கிறது.